# <u>புது வருடப் பாடம்</u>

**அருண் ஜேட்லி**
(மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்)

2014 ஆம் ஆண்டு அமைப்பு மற்றும் நிர்வாக ரீதியில் இந்தியாவில் குறிப்பிடத்தகுந்த அளவு மாற்றங்கள் ஏற்படவுள்ளதா? இந்திய மக்களின் எதிர்பார்ப்புகள் அதிகரித்த வண்ணம் உள்ளன. வலுவான கருத்துகளை உருவாக்குபவர்கள் இந்திய நடுத்தர வர்க்கத்தினர் மட்டுமல்லர். இவர்களைத் தவிர இந்தியாவில் உள்ள பெருமளவிலான பிரிவினரின் எதிர்பார்ப்பு இவர்களிடமிருந்து முற்றிலும் மாறுபட்டது. இவர்கள்தான் இந்திய அரசியலை, பொது வாழ்க்கையில் உள்ளவர்களை மற்றும் நிர்வாகத் திறனை கடுமையான முறையில் தீர்மானிக்கப் போகிறார்கள். இவர்கள் ஆட்சி பீடத்தில் அமர்த்தவும் தங்களுடைய எதிர்பார்ப்புக்கு தகுந்தபடி இல்லை என்றால் அவர்களை அங்கிருந்து தூக்கி எறியவும் செய்வார்கள்.

நான்கு மாநிலங்களில் நடைபெற்ற சட்ட மன்றத் தேர்தல்களின் முடிவுகள் ஒரு விஷயத்தை நிர்ணயித்துள்ளன. தனது செயல்பாடுகள் மற்றும் குறிப்பாக அவரது தனிப்பட்ட நம்பகத்தன்மை மூலமாக மூன்றாவது முறையாக தலைமையேற்று பா.ஜ.க.வுக்கு வெற்றியை ஈட்டித் தந்துள்ளார், மத்திய பிரதேச முதலமைச்சர், திரு ஷிவ்ராஜ் சிங் சவுஹான். டாக்டர் ராமன் சிங்கின் தனிப்பட்ட நம்பகத்தன்மையுடன் அவரது  பொது விநியோக அமைப்பின் வெற்றியுடன் சேர்ந்து பா.ஜ.க.விற்கு வெற்றி கிடைத்துள்ளது. இந்த இரண்டு முதலமைச்சர்களும் அவரவர் மாநில மக்களுக்கு நிறைய நன்மைகளை செய்துள்ளனர். ராஜஸ்தானில் காங்கிரஸ் அரசு அதன் அமைச்சர்கள் மற்றும் எம்.எல்.ஏ.க்களுக்கு எதிரான மோசடி குற்றச்சாட்கள் மற்றும் மோசமான நடவடிக்கைகளாலும் மக்களால் தூக்கி எறியப்பட்டுள்ளது. இந்த நான்கு மாநிலங்களில் நடைபெற்ற தேர்தல் முடிவுகள் ஒரு தெளிவான சேதி கூறுகிறது – சமூக, அரசியல் காரணங்கள் முக்கியம் என்றாலும் நம்பகத்தன்மைதான் மிகவும் முக்கியம் என்பதுதான்.

தில்லியில், காங்கிரஸ் அரசு அதன் நம்பகத்தன்மையை இழந்துவிட்டது. கடந்த மூன்று வருடங்களாக தில்லிதான் ஊழலுக்கு எதிரான இயக்கத்தின் மையமாக மாறிவிட்டது. காங்கிரஸ் அரசு மிக மோசமான தோல்வியைத் தழுவியது என்பது மிகத் தெளிவானது.

சாதாரண நிலையில் பா.ஜ.க. தேர்தலில் அறுதிப் பெரும்பான்மை பெற்றிருக்கும். ஆனால், இந்த தடவை வாக்காளர்களில் ஒரு பிரிவினர் புதிதாக ஒரு மாற்றத்தை விரும்பி ஒரு புது கட்சியை கொண்டுவரும் பரிசோதனை முயற்சி செய்திருக்கிறார்கள். இதுவரை பின்பற்றப்பட்டு வந்த அரசியல் தராதரத்துக்கு எதிரான மவுன முழக்கம், ஆம் ஆத்மி கட்சிக்கு குறிப்பிடத்தக்க அளவுக்கு வாக்குகளைப் பெற்றுத் தந்துள்ளது. வாக்குகள் மற்றும் வெற்றிபெற்ற இடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் பா.ஜ.க. மிகப் பெரிய கட்சியாக உருவெடுத்திருந்தாலும் தில்லி தேர்தல் முடிவுகள் பா.ஜ.க. தன்னைத் தானே அலசி, ஆராய்ந்து எடைபோட்டுப் பார்க்க வேண்டிய நிலையை உருவாக்கியுள்ளது. அதன் மாநிலத் தலைவர்களும் தனிப்பட்ட வேட்பாளர்களும் வெகுஜன எதிர்பார்ப்புக்கு ஏற்ப, தங்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தையும் ஏற்படுத்தியுள்ளது. தில்லியின் தலைவராக டாக்டர் ஹர்ஷவர்த்தன் நியமிக்கப்பட்டது சரியான திசையில் எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கை ஆகும். கட்சியின் தேர்தல் செலவுக்காக நாடு முழுவதும் பத்து லட்சம் குடும்பங்களை அணுகி, சிறு சிறு தொகையாக நன்கொடை திரட்ட பாரதிய ஜனதா முடிவு செய்துள்ளது. தில்லியில் உள்ள பாரதிய ஜனதா கட்சியினரான நாங்கள் எங்களது சொந்த நம்பகத்தன்மையை வலுப்படுத்திக்கொள்ளும் வகையில் பெருமளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது.

“நம்பகத்தன்மைக்குத்தான் முக்கியத்துவம்” என்பதைத்தான் புத்தாண்டின் அரசியல் செய்தியாக எடுத்துக்கொண்டால், காங்கிரஸ் அதன் தவறுகளிலிருந்து இன்னும் பாடம் கற்றுக்கொள்ளவில்லை. நான்கு மாநிலங்களில் காங்கிரஸ் படுதோல்வி அடைந்திருந்தாலும் மூடி மறைக்கும் இரண்டு நடவடிக்கைகளுடன் புத்தாண்டை அக் கட்சி தொடங்கியுள்ளது. ஆதர்ஷ் ஊழலில் பல்வேறு காங்கிரஸ் தலைவர்களுக்கு கணிசமான பங்குள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள விசாரணை கமிஷன் அறிக்கையை மகாராஷ்டிர மாநில அரசு நிராகரித்துள்ளது. இத்தகைய நடவடிக்கை தூய்மையான, நம்பகத்தன்மை வாய்ந்த அரசியல் தேவை என்ற பொதுமக்கள் எதிர்பார்ப்பை கேள்விக் குறியாக்கும் நடவடிக்கை ஆகும். ஹிமாசல பிரதேச முதலமைச்சர் திரு வீர பத்ர சிங் மீது ஊழல் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தாலும் ஊழல் கறை படிந்துள்ள அவருக்கு ஆதரவாக ஆர்ப்பாட்டங்கள் நடத்த காங்கிரஸ் கட்சி வெட்கமில்லாமல் முடிவு

செய்துள்ளது. நெறிமுறைகளுக்கு எதிரான இந்த நடவடிக்கை பொதுமக்களை மேலும் அதிகமாக கொந்தளிக்க வைக்கும்.

நம்பகத்தன்மை நிறைந்த அரசியல்தான் வேண்டும் என பொதுமக்கள் தெள்ளத் தெளிவாக உணர்த்தியுள்ளனர். இந்த எதிர்பார்ப்பை அலட்சியப்படுத்துவோர் அரசியலில் முகவரி இல்லாமல் போய்விடும் அவல நிலையை அவர்களே உருவாக்கிக்கொள்கின்றனர்.

*********